**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**

**அசல் வழக்கு எண் 170/2022**

**வாதி தரப்பு சாட்சி-1 சண்முகம் திருமதி.ஏ.பிரேமா பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 26.03.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை தொடர்ச்சி</u>**

1) தாவா சொத்துக்கள் பூமிதான வாரியத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். மேற்படி சொத்துக்களை என் தகப்பனார் பிச்சைக்காரன் அனுபவம் செய்து வந்தார் என்றால் சரிதான். பிச்சைக்காரன் என்பவருக்கு பெருமாள், சுப்பிரமணி, சண்முகம், ஆண்டியப்பன் ஆகிய நான்கு மகன்கள். எனது தகப்பனார் இறந்த பின்னிட்டு 2013 ம் வருடம் நாங்கள் மேற்படி சொத்துக்களை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். 2013 ம் வருடம் பாகம் பிரிக்கும்பொழுது என் சகோதரர் பெருமாள் இறந்துவிட்டார் என்றும், அவருக்கு பதிலாக அவரது மனைவி காளியம்மாளும், சுப்பிரமணி இறந்துவிட்டதால் அவரது மனைவி சிறும்பாயும், மற்றும் நான், சண்முகம் ஆகியோர் பாகம் செய்து கொண்டோம் என்றால் சரிதான். மேற்படி பாகப்பத்திரம் 20.02.2013 ல் எழுதிக்கொண்டோம். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். மற்ற பாகஸ்தர்கள் அனைவரும் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து செய்துள்ளனர் என்றால் சரிதான்.

2) மேற்படி பாகப்பத்திரத்தில் உள்ள சி அயிட்ட சொத்து எனக்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆவணம் இன்னும் பதிவு செய்யப்படவில்லை. டி செட்டியூல் சொத்தானது என் தம்பி ஆண்டியப்பனுக்கு உரியது என்றால் சரிதான். அவரும் மேற்படி ஆவணத்தில் கையெழுத்து போட்டுள்ளார் எற்னால் சரிதான். மேற்படி ஆவணத்தில் சாட்சிக்கையெழுத்து போட்டுள்ள நபர்கள் யார் என்றால் எங்கள் தங்கை பிள்ளைகள். பாகப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சொத்தைதான் நான் அனுபவித்து வருகிறேனா என்றால் ஆமாம். பத்திரத்தில் கண்டுள்ள கிணறு மற்றும் மோட்டாரில் எனக்கு பாதி பாத்தியம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். டி செட்யூலில் கண்டுள்ள சொத்தைதான் ஆண்டியப்பன் அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.

3) பத்திரத்தில் கண்டுள்ள கிணற்றில் ஆண்டியப்பனுக்கு பாதி பாத்தியம் வழங்கப்பட்டுள்ளது என்றால் பத்திரத்தில் அவ்வாறு அவர்களே எழுதிக்கொண்டார்கள். நான் கையெழுத்து மட்டும் போட்டேன். மேற்படி

ஆவணத்தில் கிணறு மற்றும் போர்வெல்லில் பாதி பாகம் என கண்டுள்ளதா என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தின்படி அனுபவம் செய்து வந்து தற்போது ஏன் அதை மறுக்கிறோம் என்றால் கிணறு வெட்டுவதற்கு 1ம் பிரதிவாதி பணம் எதுவும் கொடுக்கவில்லை. 2013 ம் வருடம் பாகப்பத்திரம் ஏற்பட்ட பின்னிட்டு கிணறு வெட்டியதற்கு பணம் கொடுக்கவில்லை என பிரதிவாதிகளுக்கு அறிவிப்பு எதுவும் கொடுத்தேனா என்றால் இல்லை. வழக்குரையில் ஆண்டியப்பனுக்கு கிணறு மற்றும் மோட்டாரில் சரிபாதி பாகம் உண்டு என குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கிணற்றில் உள்ளது இலவச மின் இணைப்பு என்றால் சரிதான். மேற்படி மின் இணைப்பு பெற பணம் எதுவும் செலுத்தவில்லை என்றால் சரிதான்.

4) 2013 ம் முதல் ஆண்டியப்பன் கிணறு பாகத்தை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. மேற்படி கிணறு குறித்து எவ்வளவு நாட்களாக பிரச்சனை என்றால் 1995 முதல் பிரச்சனை தான். பிரதிவாதிகள் பிரச்சனை செய்தது குறித்து காவல்துறையில் புகார் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் நீதிமன்றத்தில் பார்த்துக்கொள்ளும்படி சொன்னார்கள். பிரதிவாதிகள் நான் விவசாயம் செய்வதை எப்போது தடுத்தார்கள் என்றால் 01.08.2022 ல் தடுத்தார்கள். அதற்கு முன்பு தடுக்கவில்லையா என்றால் இல்லை. கிணற்றில் தண்ணீர் உள்ளது. வழக்கு போட்டதற்கு பின்னிட்டுதான் பிரச்சனையா என்றால் ஆமாம். 01.08.2022 ல் தடுத்ததாக வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு பொய்யானது என்றும், 2013 முதல் குடும்பசொத்துக்களை பாகம் பிரித்துக்கொண்டும், கிணறு மற்றும் மோட்டாரில் சரிபாதி பாகத்தை 1ம் பிரதிவாதி தற்போது வரை அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல.

5) நான் பணம் கேட்டு பிரதிவாதிகளிடம் தகராறு செய்கிறேன் என்றால், எனது சொந்த செலவில் கிணறு வெட்டினேன். அதற்கான பணத்தை தரும்படி தான் 1ம் பிரதிவாதியிடம் கேட்டேன். தர மறுத்துவிட்டார். நான் சொல்வது தவறு என்றும், நானும், 1ம் பிரதிவாதியும் சேர்ந்துதான் கிணறு வெட்டினோம் என்றால் சரியல்ல. நான்தான் என் பணத்தைக்கொண்டு கிணறு வெட்டினேன். 1ம் பிரதிவாதி பணம் கொடுக்கவில்லை என வழக்குரையில் சொல்லியிருக்கிறேனா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக தற்போது கற்பனையாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் தற்போது எனது நிலத்தில் சாகுபடி செய்கிறேனா என்றால் செய்கிறேன். 1ம் பிரதிவாதி சாகுபடி செய்வதை தடுப்பேனா என்றால் சாகுபடி செய்ய விடமாட்டேன். 1ம் பிரதிவாதி என்மீது அ.வ.எண்.20/2023 என்ற வழக்கை இந்நீதிமன்றத்தில் தாக்கல்

செய்துள்ளாரா என்றால் ஆமாம். நான் கிணற்றில் விடாமல் தடுப்பதால்தான் 1ம் பிரதிவாதி மேற்படி வழக்கை தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல.

6) சாட்சி பெருமாள் எந்த ஊரைச் சேர்ந்தவர் என்றால் ராசாப்பட்டி என்ற ஊரைச் சேர்ந்தவர். என் ஊரில் இருந்து மேற்படி ஊர் சுமார் 6 கி.மீ தொலைவில் உள்ளது. சாட்சி பெருமாளுக்கு ராசாப்பட்டியில்தான் நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். சாட்சி பெருமாள் தினசரி என்னை பார்க்க என் ஊருக்கு வருவாரா என்றால் இல்லை. எப்போதாவது கடையில் பார்ப்போம். எனக்கும், 1ம் பிரதிவாதிக்கும் நடக்கும் பிரச்சனை சாட்சி பெருமாளுக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். நான் பொய்யாக சாட்சியை அழைத்து வந்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R.தமிழரசி

**Additional District Munsif,**

**Kulithalai.**